2020 ஜனவரி 9]

25—

சமுதாயக் கூடம்

***13778—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கொத்தாக விருதுகளை, கெத்தாகப் பெற்று வந்து, தமிழகத்தின் பெருமையைத் தலை நிமிரச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைப் பதிவு செய்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு தன்னிறைவுத் திட்டம் என்னும் மகத்தான திட்டம் தந்த, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவராலும் 'எங்கள் வீட்டுப் பிள்ளை', 'மதுரை வீரன்' என்று அன்போடு இன்றும் அழைக்கப்படுகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர்*

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்து, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி, பல துறைகளில் இந்தியாவிலேயே தமிழகத்திற்கு முதல் இடத்தைப் பெற்றுத் தந்து, சிறந்த நிருவாக ஆளுமைக்கு தமிழகம் முதலிடம் என்பதை உருவாக்கிய பெருமைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர், குடிமராமத்து நாயகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களையும் வணங்குகின்றேன். இம்மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிட குடியிருப்புப் பகுதிகளில் கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதை ஒட்டியுள்ள புதுப்பாளையம், ராமம்பாளையம், வேலம்பட்டி ஆகிய கிராமங்களிலும் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அந்தப் பகுதியில் வசித்து வருகின்றவர்களின் அனைத்து வீடுகளும் சிறிய, சிறிய அளவிலேதான் உள்ளன. அவர்கள் தங்களுடைய இல்லங்களில் ஏதாவது விசேஷம் என்றாலும்கூட, அந்த விசேஷத்தை நடத்துவதற்கு முடியாமல், அங்கிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள நகரத்தை நாடிச் சென்று, திருமண மண்டபத்தைப் பிடித்துத்தான் அந்த விசேஷங்களை நடத்த வேண்டியுள்ளது. அந்தத் திருமண மண்டபத்திற்கும் தொகை அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளதால், அந்தத் தொகையைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தால். . .

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விசேஷங்களை நடத்துவதற்கு அவர்கள் சிரமப்படுகிறார்கள்.*

2020 ஜனவரி 9]

வேலம்பட்டி புதூர் பகுதியிலே வசிக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971–72 கால கட்டத்திலிருந்து சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2012 ஆம் ஆண்டு தொடங்கி 2019 ஆம் ஆண்டு வரை சுமார் 62 சமுதாயக் கூடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அதன் பிறகு பெறப்படும் கருத்துருக்கள் மீது தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 50 குடும்பங்களைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் அருந்ததியின மக்கள் சுமார் 180 நபர்கள் வசித்து வருகிறார்கள். வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புக்கு அருகில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் புதுப்பாளையம் என்ற இடத்திலும், கிருஷ்ணாபுரம் என்ற இடத்திலும் ஊரக வளர்ச்சித் துறையினால் சுமார் 3 சென்ட் அளவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடம், புதிய கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதியோடு நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவையின் அடிப்படையில், முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, வேலம்பட்டி புதூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*